# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2025/33 - 2017 ජූනි 29 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.06.29

*2025/33 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பீ. 21/78* (xiv)

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*20(4)(ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 20(4)(ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல ஆகிய நான், இலங்கை, கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் அலுவல்களின் நிருவாகம் பாரதூரமாக சீர்குலைந்துள்ளதெனவும் சொல்லப்பட்ட நிறுவகத்தின் அதிகாரிகள் வழமையான நிலைமைகளை மீளநிலைநாட்டுவதற்குத் தவறியுள்ளனர் எனவும் திருப்திப்படுவதன்மேல், சொல்லப்பட்ட சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையின், கட்டளைச்சட்டத்தின், நியதிச்சட்டத்தின், துணைவிதியின், ஒழுங்குவிதியின் அல்லது விதியின் கீழ் கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் சொல்லப்பட்ட பணிப்பாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அல்லது அவர் மீது சுமத்தப்பட்டுள்ள அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ள ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை முறையே பிரயோகிக்கும், புரியும் அல்லது நிறைவேற்றும் நோக்கத்திற்காக கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் பணிப்பாளருக்குப் பதிலாக தகுதிவாய்ந்த அதிகாரியாக இருப்பதற்கு பேராசிரியர் ஜயந்த வெலிஹிந்தவை 2017, மே மாதம் 27 ஆந் திகதியிலிருந்து இக்கட்டளை மூலம் நியமிக்கின்றேன்.*

லக்ஷ்மன் கிரியெல்ல,<br>
உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்.

கொழும்பு,<br>
*2017, யூன் 21.*

*07 - 406*